## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 101/2012

PW5 – திரு. ஆரோக்கியம் த/பெ.தனிஷ்கிளாஸ் நாள்.10.03.2026

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு 51 வயதாகிறது. எனக்கு எழுத படிக்க தெரியாது. கையொப்பம் இட தெரியும்.அசல் வழக்கின் பிராதில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் தெரிவித்து தான் அது தயார் செய்யப்பட்டது. பிராதில் கண்டுள்ள விவரங்களை தான் நிரூபண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால சரிதான். தாவா சொத்தை எனது தகப்பனார் எப்போது கிரையம் வாங்கினார்கள் என்றால் 1960 வருடம் எனது தகப்பனாருககு தாவா சொத்தை கொடுத்தார்கள் அதன்பின் 2002 ஆண்டு கிரையம் செய்தோம். தேதி மாதம் நினைவில் இல்லை. மேற்படி 1960 ஆண்டு தாவா சொத்தை எனது தகப்பனாருககு கொடுத்த விவரத்தை பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல தெரிவித்துள்ளேன். மேற்படி விவரத்தை நான் பிராதில் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொடுத்தது உண்மைதான்.

2. தாவா சொத்தின் நான்குமால் என்னவென்றால் மேற்கு பக்கம் பாதை உள்ளது. தெற்கு பக்கம் வாய்க்கால் உளள்து. கிழக்கு பக்கம் சுப்ரமணியின் தம்பி உடையார் தேவர் சொத்து உள்ளது. வடக்கு பக்கம் சுப்ரமணிய தேவர் சொத்து உள்ளது. சுப்ரமணியன் மொத்த சொத்தில் எனது தகப்பனாருக்கு 38 செண்ட் மட்டும் தான் எழுதி கொடுத்தார்

என்றால் சரிதான். மேற்படி 38 சென்டை எனது தகப்பனார் அளந்துதான் வாங்கினார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள பாதையானது பொது பாதை என்றால் சரியல்ல. 3 சென்ட் இடத்தை நாங்கள் வேலிபோட்டு வைத்துள்ளோம். 1960 வருடம் தாவா சொத்தை எனது தகப்பனாருக்கு கொடுத்து அதில் எனது தகப்பனார் குடிசை வைத்து அனுபவம் செய்ததற்கு வீட்டுவரி ரசீது இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அப்போது எனது தகப்பனாருக்கு அந்த வசதி இல்லை. எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சொத்தை சுப்ரமணியன் என்பவரிடமிருந்து அந்தோணியம்மாள், செவத்தியம்மாள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திறகு மேற்கு பக்கம் வருவாய் ஆவண புலப்படத்தில் பொது பாதை என குறிப்பிடப்படுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2005 ஆண்டு தெரியவந்தது. மேற்படி 2005 ஆண்டு எனக்கு தெரியும் என்ற விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி 2005 ஆண்டே எனக்கு விவரம் தெரிந்திருந்தால் நான் வருவாய் துறையினரை அணுகி மனு அளித்திருப்னேன் என்றால் சரியல்ல. என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எனக்கு அப்போது தெரியாது.

3. எனது தகப்பனார் தாவா சொத்தில் ஆரம்ப காலத்தில் கட்டிய ஓட்டு வீடைஅகற்றிவிட்டு 2012 ஆண்டு நாங்கள் வீடு கட்டும்போது அளவு கற்களை அகற்றிவிட்டு ஆக்கிரமித்து வீடுகட்டினோம் என்றால் சரியல்ல. நாங்கள் முறையாக அளந்து 3 சென்ட் இடத்தை விட்டு விட்டு தான் வீடுகட்டினோம். அச்சமயத்தில் எங்களுக்கும் கிராம மக்களுக்கும் மேற்படி பாதை தொடர்பாக பிரச்சனைஏற்பட்டு காவல்நிலையம் சென்றோம் என்றால் சரியல்ல. அப்போது சொல்லவில்லை. பிராதில் 26.09.2012 தேதி காவல்நிலையம் சென்றதாகவும் அதற்கு உரியநீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடி கொள்ளும்படி அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 1967 ஆண்டே நாங்கள் உரிமை கொண்டாடும் பாதையை பொது பாதையாக அரசாங்கம் மாற்றிவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுமார் 7,8 ஆண்டுகளுக்கு முன்புதான் தெரியவந்தது. வழக்குதாக்கல் செய்து சுமார் 12 வருடங்கள் இருக்கும். பொது பாதையாக மாற்றம் செய்யப்பட்ட விவரம்

தெரியாமல்தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால்சரிதான்.

4. மேற்படி பாதை பிரச்சனை தொடர்பாக வருவாய்துறையினரிடம் மனு கொடுத்தேனா என்றால் நாங்கள் கொடுக்கவில்லை பிரதிவாதிகள் கொடுத்ததன்பேரில் அளந்தார்கள். நாங்கள் பணபலம் மிக்க நபர்கள் என்றும அதனால் பொதுபாதையை ஆக்கிரமித்து வைத்துவிட்டு கிராமமக்களுக்கு இடையூறு செய்துவருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் மொத்தம் கிரையம்பெற்றது 35 செண்ட் என்றால் சரிதான். எவ்வளவு விஸ்திரன நிலத்திற்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளது என்றால் 37.5 செண்ட் நிலத்திற்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளது. எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 6 ல் எங்களுக்கு அரைசெண்ட் அளவிற்கு பட்டா குறைவாக வழங்கபட்டுள்ளது என்று தெரிவித்துள்ளேன் இது தொடர்பாக வருவாய் துறையினரிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. நில புலப்படத்தின்படி எங்களுக்கு 32.04 செண்ட் உள்ளதாக நிரூபண வாக்குமூலத்தில தெரிவித்துள்ளேன் மேற்படி நிலம் குறைவாக உள்ளது தொடர்பாக வருவாய் துறையினரிடம் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். 1960 ஆண்டு எனது தகப்பனாரும் அவரது சகோதரரான செபஸ்தியான் என்பவரும் தாவா சொத்திற்கு அருகே வடப்புறம் உள்ள புறம்போக்கு நிலத்தில் தான் வீடு கட்டி இருந்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக தெரிவிக்கிறன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது அது விவசாய நிலமாக இருந்தது என்றால் சரிதான். அதன்பின் தாவா சொத்தில் எனது தகப்பனார் ஓட்டுவீடு கட்டினார்என்றால் சரிதான். வ.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் பாதை என்று தான் உள்ளது என்றும் தனித்து பாத்தியப்பட்ட பாதை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் மொத்தமாக 38 செண்ட் நிலத்தை தான் வாங்கினோம்.

6. நாங்கள் வேண்டுமென்றே வழக்கை சுமார் 15 ஆண்டு காலமாக காலம் கடத்தி நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கையும இதனுடன் சேர்ந்த வழக்கையும் விரைவில் முடிக்க சொல்லி உயர்நீதிமன்றம் பிறப்பபித்த உத்தரவு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் 2002 ஆண்டு தான் கிரையைம் பெற்றோம்

என்றும் அதற்கு முன்புவரை தாவா சொத்தில் எங்களுக்கும் எனது தகப்பனாருக்கும் எந்த வித பாத்தியமும் கிடையாது என்றால் சரிதான். ஆனால் அதற்குமுன்பே தாவா சொத்தை எங்களுக்கு கொடுத்துவிட்டார்கள். எங்களுக்கு தாவா சொத்தை கொடுத்த சுப்ரமணியனை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் ஆணையர் தவறாக அளந்துவிட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். ஆணையர் உரிய அதிகாரிகளுடன் முறையாகதான் அளவீடு செய்தார் என்றும் ஆணையர்அறிக்கை எங்களுக்கு பாதகமாக உள்ளதால் நான் பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. பொது பாதைக்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பு இல்லை என்றும்அதனை ஆக்கிரமிப்பு செய்து வைத்து விட்டு கிராம பொதுமக்களுக்கு தடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் வேண்டுமென்றே வழக்கை காலம்தாழ்த்தவேண்டும் என்று வீண் வாதாடி வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் தவா சொத்தில் எங்கள் அனுபவத்தை தடையுறு செய்யக்கூடாது என்று கேட்டு வழக்கு தாக்கல்செய்துள்ளோம். இவ்வழக்கில் நாங்கள் உரிய நீதிமன்ற கட்டணம்செலுத்தவில்லை என்றும் அதனால் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் இடம்பெற்றுள்ள விவரங்கள முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை